# நித்திலக் குவியல்

ஆசிரியர் :

புலவர் ப.கி.பொன்னுசாமி

எம்.ஏ.,எம்.எட்.



திருவள்ளுவராண்டு 2035—மாசி

குவியல் 43]  பிப்ரவரி—2004  [முத்து 2



செந்தமிழ்ப் புலவன் சீரிய மறவன்
நந்தமிழ்க் காக்க நாளெலாம் உழைத்தோன்
இந்தியை எதிர்த்த இலக்குவ னார்புகழ்
இந்நில மதனில் என்றும் வாழ்க !

மாணவர் மன்றம்

சென்னை-1



தாளாண் தகவர் பொறியாளர் வள்ளல் சி. எஸ். குப்புராஜ் அவர்களின் முத்து விழா சென்னை நியூ உட்லன்ஸ் உணவு விடுதி அரங்கில் 5-1-2004 அன்று நடைபெற்றது. மன்றத் தலைவர் ப. கி. பொன்னுசாமி, செயலர் புலவர் த. இராமலிங்கம், இணைச்செயலாளர்கள் பேராசிரியர் அ. மாணிக்கம், புலவர் அ. தங்கவேலன் ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புச் செய்தனர்.



தாளாண் தகவர், பொறியாளர் வள்ளல் சி. எஸ். குப்புராஜ் அவர்களின் முத்து விழா 5-1-2004 அன்று நடைபெற்றது. அவ்வமயம் கல்லூரி மாணவர்களுக்குத் திருவருட்பா போட்டி நடத்திப் பரிசு வழங்க அறக்கட்டளையாக மன்றத் தலைவர் புலவர் ப. கி. பொன்னுசாமி அவர்களிடம் ரூ. 10,000/க்கான காசோலையை முத்துவிழா நாயகர் வழங்குதல்.

தொலைபேசி : 25251587

# நித்திலக்குவியல்





| குவியல் 43 | திருவள்ளுவர் ஆண்டு 2035<br>மாசி<br>பிப்ரவரி–2004 | முத்து 2 |
|---|---|---|



## செந்தமிழ்க் காவலர்
## முனைவர் சி. இலக்குவனார்
## ஒரு தமிழ் மறவர்

தமிழகத்தின் நெற்களஞ்சியமாக விளங்கிய முன்னாள் தஞ்சை மாவட்டத்தில், திருத்துறைப்பூண்டி வட்டத்தில் (நாகப்பட்டினம் மாவட்டம், வேதாரணியம் வட்டம்) 'வாய்மேடு' என்னும் சிற்றூரில், தாளாண் சிறந்த வேளாண் குடியில் தோன்றியவர் சிங்காரவேலர். அவர்தம் துணைவியார் இரத்தினம் அம்மையார். இவ்விணையர்தம் மூன்றாம் மகனாக 17-11-1910ஆம் ஆண்டில் பிறந்தவர் போற்றுதலுக்குரிய இலக்குவனார்.

இவர், தாம் பிறந்த 'வாய்மேடு' என்னும் சிற்றூரில் தொடக்கக் கல்வியைத் தொடங்கினார். அரசர் மடத்தில் (இராசாமடம்) நடுநிலைக் கல்வி பயின்றார். பொது அறிவு கற்பிக்கும் ஆசிரியர் சாமி. சிதம்பரனாரின் அன்பிற்குரிய மாணவராகத் திகழ்ந்தார். ஆசிரியரின் பகுத்தறிவு கொள்கைகளும், சீர்திருத்தக் கருத்துகளும் தனித்தமிழ் நாட்டமும் இவரைக் கவர்ந்தன. அரசர்மடத்தில் மூன்றாம் படிவம் முடித்த பின்னர் உரத்தநாடு உயர்நிலைப் பள்ளியில் சேர்ந்து, அப்பள்ளியின் உணவு விடுதியில் தங்கிப் படித்தார்; பள்ளி இறுதித் தேர்வில் சிறப்பாகத் தேர்ச்சி பெற்றார். புலவர் பட்டயம் பெற வேண்டும் என்ற ஆர்வத்தால் திருவையாற்று அரசர் கல்லூரியில் சேர்ந்தார்; உண்டுறை விடுதியில் சேர்ந்து படித்தார். புலவர் தேர்வில் அக்கல்லூரியில் முதல் மாணவராகத் தேர்ச்சி பெற்றார். ஆசிரியர்களின் பாராட்டு தலைப் பெற்றார். கல்லூரியின் திருவள்ளுவர் மாணவர் கழகச் செயலாளராகவும் விளங்கினார்.

களிலும் பெரும் பங்கு கொண்டிருந்தார். திருக்குறள் வகுப்பும், தொல்காப்பிய வகுப்பும் தொடர்ந்து நடத்தினார். மாநாடு கூட்டினார். பல்வேறு இதழ்களையும் நடத்தினார். தெருத் தெருவாகச் சென்று தமிழ்மொழியைத் தூய தமிழில் பரப்பினார். தமிழிலும் ஆங்கிலத்திலும் பல நூல்களைப் படைத்துள்ளார். அதன் வாயிலாகப் பல பட்டங்களும் விருதுகளும் பெற்றுள்ளார்.

முனைவர் இலக்குவனார் தமிழ்க் காப்பினை வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்; பொருளையோ பதவியையோ புகழையோ பாராது தமிழ் நலத்தையே கண்டவர்; யாருக்கும் அஞ்சாது தமிழ் பற்றிய கருத்துகளை மேடைகளில் முழங்கியவர்; திருக்குறளையும் தொல்காப்பியத்தையும் இரு கண்களாகக் கொண்டவர். இந்தியை எதிர்த்துச் சிறை சென்ற தமிழ் மறவர். தமிழுக்காகத் துன்பத்தில் வளர்ந்து, துன்பத்தைத் தாங்கித் துன்பத்திலேயே வாழ்ந்து, தமிழுக்காகவே உழைத்துச் சிறை சென்றவர்.

தமிழறிஞர்களும், தமிழ் ஆர்வலர்களும், வழக்கறிஞர்களும், வள்ளல்களும் ஒருங்கு கூடி முனைவர் இலக்குவனாரின் பல்திறத் தொண்டினைப் பாராட்டி, மதுரைத் தமுக்கம் கலையரங்கில் 9-1-1966இல் பொற்கிழி வழங்க ஏற்பாடு செய்தனர். பேரறிஞர் அண்ணா அவர்கள் கலந்துகொண்டு பொற்கிழி வழங்கிப் பேராசிரியர் இலக்குவனாரின் தமிழ்த் தொண்டினைப் பாராட்டிப் பேருரையாற்றினார்.

ஓடி ஆடித் தமிழ்த் தொண்டாற்றிய பேராசிரியரைச் சர்க்கரை நோய் தாக்கியது. அதனைத் தொடர்ந்து பல நோய்கள் தொடர்ந்தன. ஆயினும், அச்சமின்றி வாழ்ந்த அடலேறு தம்மைக் காண வந்தவர்களுக்கெல்லாம் ஆறுதல் கூறிக்கொண்டிருந்தார். அன்பே உருவான மனைவியரும், அறிவறிந்த நன்மக்களும், அன்பிற்குரிய நண்பர்களும் புலம்பி வருந்த 3-9-1973 அன்று இரவு 10 மணியளவில் மதுரை அரசினர் மருத்துவ மனையில் பேராப்பெரு நிலையுற்றார்.

அவர்தம் தமிழ்த் தொண்டைப் போற்றும் வகையில், சென்னை மாணவர் மன்றம் 20-12-2003 அன்று நடைபெற்ற 73ஆம் ஆண்டு விழாவில் அவர்தம் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துத் தம் நன்றியறிதலை வெளிப்படுத்தியது.

அவர்தம் தொண்டுகள் தொடர்ந்து மலரவேண்டும். அதுவே நாம் அவருக்குச் செய்யும் நன்றிக் கடனாகும்.

—ஆசிரியர்